
# கோபுரம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு



கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசுவர ஆலய கோபுரம்

எண்ணமெலாம் வையகத்தில் கோபுரமாய் எழுந்திடுக

# பிரார்த்தனைகள்

எழில்கொஞ்சும் இயற்கை வளங்கள் செறிந்த அழகிய பூமி இந்த இலங்கைத் திருநாடு. சிவனொளி மலையும், மகாவலி நதியும் பேதமிலாத பெருமையைக் கூறும் புண்ணிய சொத்துக்கள். இந்த மண்ணிலே அன்புணர்வு பொங்க, அற முறைகள் ஓங்க, வன்பும் வஞ்சப் பகைமையும் நீங்கி நாம் வாழ்ந்திருப்போமாயின் இலங்கை என்ற எங்கள் நாடு உலகிற்கே ஆன்மீக ஒளியைப் பரப்பும் திருநாடாகத் திகழ்ந்திருக்கும்.

ஆனால் உண்மையோ, அத்தனை இனிப்பாக இல்லை. திசைகள் எங்கும், திக்குகள் தோறும் அழுகுரல்கள் எதிரொலித்தன. அவலங்கள் அலைமோதின. உயிர்களை இழந்தோம். உடைமைகளைப் பறிகொடுத்தோம்.

வாழ்ந்த வீடு, உறவு, சுற்றம் அனைத்தும் இழந்து அகதிகள் என்ற புதிய நாமத்தோடு அங்குமிங்கும் அலைபாய்ந்தோம் துன்பங்கள் எல்லையில்லாமல் பெருகின. கனத்த இதயங்களின் பாரங்களை இறக்கி வைக்க சுமைதாங்கிகளைத் தேடினோம். ஆற்றுவதறியாது அரற்றினோம்.

இன்று விரக்தி மட்டுமே எஞ்சி நிற்கிறது. பொழுதெல்லாம் புகலிடம் தேடி யுகமாகக் கழிகின்றது. பெருகுகின்ற கண்ணீர் மடைதிறந்து பாய்கிறது. வெற்றுக் கைகள் இரண்டையும் கூப்பி வணங்குவதைத் தவிர வேறு வழிகள் தெரியவில்லை. எனவே அனைவரும் இணைந்து எங்கள் இதயங்களை வெறுமை செய்துகொண்டு இறைஞ்சுவதையே பணியாக ஏற்றிருக்கின்றோம்.

எல்லாம் வல்ல இறைவனே! எமது உளமார்ந்த பிரார்த்தனைகளை ஏற்று அருள்புரியுமாறு தாழ்மையோடு பிரார்த்திக்கின்றோம். நிரந்தர இழப்புகளைத் தாங்கிக்கொள்ளும் மனவலிமையை எமக்குத் தந்தருள்க. நெஞ்சிலே பட்டுவிட்ட காயங்கள் கொஞ்சங் கொஞ்சமாக ஆறுவதாக.

அங்கங்கு அகதிகளாகத் தத்தளிக்கும் நாம், நிம்மதியாக எமது ஊர்களிலே இல்லங்களிலே நிறைவோடு வாழும் நாளைக்காட்டி அருள்க. இதுவரை பட்டபாடுகள் போதும் ஆதலின், இந்த மண்ணிலே அனைவரும் அகமகிழ்வுடன் வாழும் நாளை ஆக்கி அருளுக.

தெய்வமே! தீனர், திக்கற்றோர், துயருறுவோர் அனைவர்க்கும் நின் அருள் மழை பொழிவதாக. கனிந்த நெஞ்சோடும், கண்ணீரோடும் எம் செயலாவது யாதொன்றுமில்லை எனப் பணிகின்ற எமக்கு வாழ்வு காட்டுக. நன்மைகள் நாட்டுக!

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்,
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

( திருமந்திரம் )

# கோபுரம்

இந்து சமய, கலாசார திணைக்கள வெளியீடு

மலர் : 1 ★ பிரமோதூத வருடம், கார்த்திகை மாதம் 1990 ★ இதழ் : 8


## எண்ணம்

இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடான 'கோபுரம்' இதழ், மாத வெளியீடாக புதிய வடிவிலும், கனமான செய்திகளைச் சுமந்து கொண்டும் வெளிவருகின்றது.

இலங்கையில் இந்துசமயமும், தமிழ் அலுவல்கள் துறையும் சிறந்து பரிணமிக்க இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, முனைப்பான பல செயற்பாடுகளை ஈடேற்றி வருகின்றது. ஆலயங்களைப் புனித நிலையங்களாகப் போற்றி வேத கிரியைகளுக்கும், பூஜை புனஸ்காரங்களுக்கும் மேலான முக்கியத்துவம் அளிக்கும் அதேவேளை, சமுதாய நோக்கிலே ஆலயங்களை நோக்கவும் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தோடும் ஆலயத்தை இணைத்துக் காணவும் முனைப்புடன் செயலாற்றுகின்றது. ஒருபுறம், பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் பேணிக்காத்து வரும் எமது பாரம்பரியக் கலைகளையும் மதப்பண்புகளையும் போற்றுவது. மறுபுறம் நடைமுறை வாழ்வுக்கொத்த புனித சிந்தனைகளை வளர்ப்பதன் மூலம் தனி மனித வாழ்வும் சமூக வாழ்வும் மேம்பாடடையச் செய்வது. இவ்வெண்ணக் கருவை அடித்தளமாகக் கொண்டே எமது இந்துசமயத் திணைக்களமும், தமிழ் அலுவல்கள் பிரிவும் பணியாற்றுகின்றன. எமது செயற்பாடுகள் அனைத்தினதும் ஊக்கியாகவும், வழிகாட்டியாகவும் மாண்புமிகு அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் திகழ்கின்றார்கள்.

திணைக்களத்தின் பல்வேறு செயல்களையும், சிந்தனைகளையும் கருக்கட்டும் கையேடாக ஒவ்வொரு மாதமும் கோபுரம் இதழை வெளியிட முன்வந்தோம். உயர்ந்த எண்ணங்களின் உருவக வெளிப்பாடாக எழுகின்ற கோபுரம், திணைக்களத்தின் செய்திகளோடு ஆக்கபூர்வமான கட்டுரைகளையும் தாங்கிவரும். கோபுரம் ஒவ்வொரு இந்துவின் கவனத்தையும் ஈர்க்க வேண்டும் என்பதே எமது பேரவா. அதனால் நாமும், மதமும், நாடும், உலகும் நலம் பெற்றுய்ய வேண்டும் என்பது எமது பிரார்த்தனை.

திண்ணிய நெஞ்சத்தோடும், தெளிந்த நல்லறிவோடும், நல்லன எண்ணவும் எண்ணிய முடியவும், வல்லமை நல்குமாறு பேரருளும், பெருங்கருணையும் மிக்க தெய்வத்தை இறைஞ்சுகின்றோம்.

# யோகர் சுவாமிகளின் அருள்மொழிகள்

1. நீயே உனக்கு நண்பனும் பகைவனும்.

2. கைவிரல்களைப் போலத் தனித்து இருந்துகொள்ளல் வேண்டும். தேவையான நேரம் கூடிக்கொள்ளலாம்.

3. ஞானத்தினாற் சற்குணங்களும், அச்சற்குணங்களினால் ஞானமும் தடாகமும் தாமரையும் போல நன்றாய் வளரும்.

4. ஒழுக்கமாக இருந்துகொள். எல்லாம் சரியாக நடைபெறும். ஒழுக்கமே உயர்வைத் தரும்.

5. ஒருவனைக் கூடாதவன் என்று நினைக்கும் நினைவே, நினைப்பவனுக்கு நஞ்சாகும்.

6. கடவுளை நெடுக நினைக்க முடியாது. ஆனால் தருணம் கிடைத்தவுடன் விடக்கூடாது.

7. காசை அதிகமாக வைத்திருந்து என்ன செய்யப் போகிறீர்கள்? சீவியத்தை ஒருநாளாவது கூட்ட முடியுமோ? உள்ளபொழுது தான தருமங்களைச் செய்யுங்கள்.

8. மற்றவர்களுக்கு உதவ வேண்டின் இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய். உன்னால் வேறென்ன செய்ய முடியும்? யாவும் அவன் செயல். இதுவே உத்தமமான உண்மையாகும்.

9. அலைகள் அடிக்கினும் மீன்கள் ஓடிவிட்டனவா? அதுபோல் நாமும் உலகிற்தான் வாழ வேண்டும்.

10. ஒன்றையே பலபேர் பலமாதிரியாய்ச் சொல்லியிருக்கிறார்கள். பலதையும் படிக்கப் படிக்க மனம் விரியும். ஒடுங்காது. ஒடுங்கின இடந்தான் ஆறுதலைக் கொடுக்கும்.

11. பூகம்பம் கெடுதிசெய்தால் நாம் திருப்பிக் கெடுதி செய்கிறோமா? பேசாமல் இருப்போம். அதேபோல் அவரவர் வேலையைப்பார்த்துக்கொள்ள வேண்டும். எல்லாம் கடவுளே.

12. சிவபக்தி மாத்திரந்தான் மனிதனைப் பாக்கியவானாக்கும். மற்றவையனைத்தும் பிரயோசனமற்றவை. ஆகையால் இடைவிடாமல் சிவத்தியானம் பண்ணு.

13. தவத்திலே மேம்பட்டவர்களைக்கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்கின்றன. ஆதலால் அவற்றை வெல்வதற்குச் சிவத்தியானம் செய்க.

14. நாங்கள் எங்கள் சிறுமைக் குணத்தினால் இயல்பிழந்து தருமவழியினின்று தவறுகிறோம். தவறுதல் நீங்கித் திடமுண்டாகச் சிவத்தியானமே சிறந்த கருவியாகும்.

15. கத்தரிக் கன்றுகளை நாட்டினால் கத்தரிக்காய்களையே பெறலாம். நன்மையை விதைத்தால் நன்மையை அறுவடை செய்வாய். தீமையை விதைத்தால் தீமையையே நீ அறுவடை செய்வாய்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

# திருப்பொற்சுண்ணம்

திருவாசகத்தில் திருப்பொற் சுண்ணம் என்பது அழகான ஒரு சிறுபகுதி. இருபது பாடல்கள் கொண்டது. சுண்ணம், அதாவது நீராடும் போது உடம்பில் பூசி முழுகுவதற்கு ஏற்ற மஞ்சனப் பொடி, (சென்னைப் பரிபாஷையில் நலங்கு மாவு) இடிக்கிற பெண்கள் கூற்றாக, மாணிக்க வாசக சுவாமிகள் இப்பகுதியைப் பாடியிருக்கிறார்.

டன் கணக்காகச் சவர்க்காரக் கட்டிகள், தேய்த்து முழுகுவதற்சென்று உற்பத்தியாகி விநியோகமாகிற இந்தக் காலத்தில் கூட, மஞ்சனப்பொடி வழக்கத்தை விட்டு மறையவில்லை. சவர்க்காரம் வழக்கத்துக்கு வருமுன் ஆடவரும் பெண்டிரும் உடம்பிலுள்ள அழுக்கைப் போக்கும் பொருட்டுச் சுண்ணம் தேய்த்து முழுகி வந்தார்கள். பயறு முதலான சில தானியங்களை அரைத்து மாவாக்கி அம்மாவுடன் வாசனைப் பொருட்கள் சிலவற்றைக் கலந்து இடித்துச் சுண்ணம் கூட்டி வந்தார்கள். இச்சுண்ணம் ஒரு 'பேடென்ட்' சரக்கன்று; அவரவர் வீட்டில் பெண்களே இதைத் தயாரித்து வந்தார்கள்.

எந்த வேலையும் செய்வதில், முன்னெல்லாம் இன்பம் இருந்தது. நாகரீக முதிர்ச்சியின் பயனாய் இன்று வேலை என்றால் இழிவானது என்ற உணர்ச்சி படித்த கூட்டத்தாரிடையே மிகுதியாகியுள்ளது. துணி துவைத்தல், பாத்திரம் துலக்குதல் முதலிய சாமானியமான அன்றாட அலுவல்களை அவரவர் செய்து கொள்வது அகௌரவம் என்ற அபிப்பிராயம் இன்றைய வாழ்க்கை முறைக்கு அடிப்படையாகி விட்டது. ஆனால் கொஞ்சநாளைக்கு முன் நிலைமை இப்படி இருக்கவில்லை. தம் தம் வேலைகளைத் தாமே செய்து கொள்வதில் எல்லா மக்களும்—ஆடவரும் பெண்டிரும், முதியவரும், இளைஞரும், செல்வரும், வறியவரும் ஓர் இன்பத்தையே கண்டார்கள். இத்தகைய சாமானிய வேலைகளில் சுண்ணம் இடித்தல் ஒன்று. 'பெரிய மனிதர்கள், என்பவர்கள் வீட்டில் கூட பெண்கள் சுண்ணமிடிப்பார்கள். வேலைக்காரர் முதலியோரை ஏவிச்செய்து வைக்கிற சுண்ணத்தில் யாருக்கும் திருப்தியுண்டாவதில்லை.

வேலையே இன்பமளித்தது என்பது ஒரு புறமிருக்க, அவ்வின்பத்தைப் பெருக்கவும் வழியிருந்தது. சுண்ணமிடிக்கும் போது ஒரு பெண் மட்டும் தனியே இடிப்பதில்லை; இரண்டு மூன்று வீடுகளிலுள்ள பெண்கள் ஒன்றுகூடி எல்லோருக்கும் வேண்டியிருக்கும் சுண்ணத்தைச்சேர்ந்தாற் போல் இடித்துக் கொள்வார்கள். பெண்கள் பலர் சேர்ந்தால், ஒரே உற்சாகமும் கும்மாளமுமாய்த் தான் இருக்கும். இவ்வுற்சாகமானது, வெறும் வம்புப் பேச்சாய் வெளிப்படாமல், அழகான பாட்டாக வெளிப்படும்.

பாட்டினால் சிறந்த பயனும் உண்டு. உலக்கை எடுத்து நெடுநேரம் உரலில் சுண்ணமிடிக்கும்போது வேலையில் சற்று நேரமானதும் சோர்வு தோன்றுதலுங் கூடும். ஆனால் பலர் கூடிப் பாடும் போது, நெடுநேரமானாலுங்கூடச் சோர்வு தோன்றுவதில்லை. இவ்வாறு வேலையில்

உள்ள இன்பத்தால் பிறந்த பாட்டு, வேலையில் வரும் சோர்வைப் போக்கவும் உதவுகிறது.

மாணிக்கவாசக சுவாமிகள், ஆனந்தமான தமது ஆன்ம அனுபவங்களையெல்லாம் மாணிக்கம் போன்ற பாடல்களாய்ப் பொழிந்துகொண்டே பல தலங்களையும் வழிபட்டு வரும்போது, ஆங்காங்கு பெண்கள் மேற்கூறியவாறு இன்பமாய் வேலை செய்ததையும், தங்களை மறந்து பாடல் பாடியதையும் கண்டார். வேலை செய்து கொண்டே அவர்கள் பாடிய பாடல்கள் தமது கருத்தையெல்லாம் வெளியிடச் சிறந்த கருவியாக அமைதல் கூடுமென்பதையும் அவர் உணர்ந்தார். அவ்விதமே சென்ற இடந்தோறும் பெண்கள் விளையாட்டையும் வேலையையும் ஒட்டிய பாடலாகவே தம் அனுபவம் அவ்வளவையும் பாடி வந்தார். இவ்வாறு அவர் பாடிய பல பாடல்களில் திருப்பொற்சுண்ணமும் ஒன்று.

கடவுள் என்ற தத்துவத்தைக் கண்ட மனிதன், தனக்கு விருப்பமானவற்றையெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து வந்தான். அந்தக் கடவுளுக்கு உருவம் அமைத்த போது, தன்போன்ற மனித உருவத்தையே அதற்கும் தந்தான். தனக்கு விருப்பமான உடை, உணவு, அணிகலன், பூ, நீர் முழுக்கு, சாந்து முதலியவற்றையெல்லாம் கடவுளுக்கே கொடுத்தான். இதன் பயனாக கடவுளுக்குக் கோயில், திருவுருவம், வழிபாட்டுக் கிரமம், திருவிழாக்கள் முதலியனவெல்லாம் தோன்றலாயின.

சுண்ணமும் இதற்கு விதிவிலக்கன்று. மக்கள் இடித்து உபயோகிக்கிற சுண்ணத்தைக் கடவுளுக்கே உரியதாக்கிவிட்டார் மாணிக்கவாசகர். அவர் பாடலில், பெண்கள் சுண்ணமிடிக்கிறார்கள். அப் பெண்கள் யாவரும் ஐயன் அணி தில்லை வாணன் திருவருளிலே தோய்ந்தவர்கள். ஆதியும் அந்தமும் ஆய அச்சேவகன் நாமங்கள் பாடிப் பாடி அவன் ஏழை அடியோமை ஆண்டு கொண்ட நலந்தனைப் பாடி நின்றாடி யாடி, அவன் நீராடுவதற்குச் சுண்ணமிடிக்கிறார்கள். அவனுக்குரிய சுண்ணமென்றால், அது வெறுஞ் சுண்ணமல்ல, பொற்சுண்ணமுமாகிவிடுகிறது.

உண்மையான பக்தியும் ஆனந்த அனுபவமும் காரணமாக, மாணிக்கவாசகர், எந்நேரமும் எந்த நிலையிலும் இறைவனுடைய பெருங்கருணையாகிய அருள் வெள்ளத்திலே ஒன்றி நிற்கிறார். அவருடைய பேரனுபவத்தை அறியாத உலகத்தார் அவரைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்: அவரோ நாட்டாருக்கு அவ்வனுபவம் உண்டாகவில்லையே என்ற இரக்கமும், அறியாது தம்மைப் பித்தனென்கிறார்களே என்ற எண்ணமும், மேலிட்டுச் சிரிக்கிறார்.

மாணிக்கவாசகருடைய பேரின்ப அனுபவ நிலைக்குமட்டுமல்ல, சாமானிய உலக வாழ்க்கைக்குமே இது பொருந்துவதாகும். ஒரே நோக்கத்தைக் கொண்டு அதற்காகவே வாழ்பவர்களை உலகம் பித்தரென்று கூறிச் சிரிக்கத்தான் சிரிக்கிறது. இப்படிச் சிரிக்கிற உலகைக் கண்டு அவரும் சிரிக்காமல் என்ன செய்வது?

பெண்கள் சுண்ணமிடிக்கிற சூழ்நிலையில் கலந்துவிட்ட மாணிக்கவாசகர் இந்தச் சிரிப்பையும் ஒரு பாடலில் வெளிப்படுத்துகிறார். எல்லாப் பாடல்களையும் குறிப்பிட முடியாவிட்டாலும், இவ்வொரு பாடலை மட்டும் இங்கே குறிப்பிடலாம்.

இறைவனுக்கென்று பெண்கள் சுண்ணமிடிக்கிறார்கள். இடிக்கும்போது, பலபெண்கள் கூடியுள்ளமையால் எங்கும் இத்தொண்டர்களின் ஆரவாரமாயிருக்கிறது. இவர்கள் அணிந்துள்ள அணிகலன்கள் ஒன்றோடொன்று மோதி ஒலி செய்கின்றன.

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்ப
தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப
ஆர்ப்ப,

நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப,
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராமரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும்
நாமே.

இந்தவிதமாகப் பெண்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு ஆனந்தமாய்ப் பாடிச் சுண்ணமிடிக்கிறார்கள் என்ற பொருளில் மாணிக்கவாசகர் திருப்பொற் சுண்ணம் பாடியிருக்கிறார்.

ஆனால், சைவ மக்கள் சமூகத்தில் இப்பாட்டை எப்படி உபயோகிப்பார்கள் என்பது அவருக்குத் தெரியாது. ஆனந்த வெளியீட்டுக்கான இப் பாட்டைத் தமிழ் நாட்டில் சில பகுதிகளில் துக்கத்துக்கென்றே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். சென்னை தஞ்சை முதலிய பல இடங்களில், சைவம் முற்றிப்போன வீடுகளில், யாரேனும் இறந்துபோனால் அப்போது பிரேதத்தை நீராட்ட வேண்டிப் பொடி இடிக்கும்போது இப் பாட்டைப் பாடுகிறார்கள். இதில் எவ்விதப் பொருத்தமும் காணப்படவில்லை அல்லாமலும் இப்பாட்டு ஈேக்கத்துக்கென்றே ஏற்பட்டது. மரணம் தவிர மற்றச் சமயங்களில் இதைப் பாடக்கூடாது. சாதாரண காலத்தில் இதைப் பாடவே கூடாது என்ற கருத்து பழுத்த சைவக் குடும்பங்களில் காணப்படுகிறது. என்ன விபரீதம்!

திருவாசகத்தில் திருப்பொற் சுண்ணம் என்னும் பதிகத்துக்கு 'ஆனந்த மனோலயம்' என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படியிருக்க, இப் பாட்டு துக்கத்துக்குத்தான் என்ற எண்ணம் எப்படித்தான் வந்ததோ தெரியவில்லை. உயிர் பிரிகிற தருணத்தில் அயலில் இருப்போர் திருவாசகம் படிப்பது என்ற ஒரு பழக்கம் வழங்கி வருகிறது. அந்த அளவுக்கு அது நல்லதுதான். ஆயினும், வாழ்கிற காலமெல்லாம் எப்படியேனும் வாழலாம். சாகிற காலத்தில் மட்டும் 'சங்கரா சங்கரா' என்றால் போதும் என்ற கொள்கையையொட்டியது தான் இது. இது எப்படியேனும் போகட்டும்; திருவாசகத்துள் ஓரங்கம் என்ற முறையில் திருப்பொற் சுண்ணத்தையும் படிப்பது பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் இதற்கென்று விசேஷப் பொருள் கற்பித்து, அசுபத்துக்கென்றே இதை ஒதுக்கி வைத்திருப்பது பெரிதும் தவறான வழக்கம்.

ஆனந்தமும் துக்கமும் ஒன்றுதான்என்று காண்கின்ற பக்குவம் வந்த பரம ஞானிகள் வேண்டுமானால் இவ்விதம் கொள்ளட்டும். நம்மைப் பொறுத்தவரையில், சில இடங்களில் இன்று வழங்கும் மேற்கூறிய வழக்கம் நிச்சயம் மாறவேண்டும். இவ்விதம் அசுபத்துக்கென்றே இப்பாடலை ஒதுக்கி வைத்தது அறியாமையால் நேர்ந்த விபரீதமாகும். அறியாமை ஒழியவேண்டியது தானே? இதன் பொருளை யாரேனும் உணர்ந்திருந்தால் அவர்கள் இப்படி இதற்குச் சந்தர்ப்பம் கற்பித்திருக்கமாட்டார்கள்.

ஆனந்தமான பெண்கள் பாட்டையும் ஆட்டத்தையும் கண்டு களித்த மாணிக்கவாசகர், தம் பாட்டுக்கு இப்படியோர் உபயோகம் ஏற்படுமென்று கருதியிருக்கமாட்டார். இந்த மாதிரிப் பாடுவதை நிறுத்தச் செய்வது தமிழ் மக்கள் கடன். மற்றப்படி இதை எப்போதும் ஆடவரும் பெண்களும் குழந்தைகளும் ஆனந்தமாய்ப் பாடி ஆடலாம். பாடசாலை தோறும் பயிலலாம்.

பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப்
பாடித்
தேடுமின் எம்பெருமானைத் தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின்.

என்று அடிகள் கூறியவாறு, எந்தச் சமயத்திலும் யார் தாம் பாடக்கூடாது? தேடக்கூடாது? ஆடக்கூடாது?

* மு. அருணாசலம் எழுதிய திருவாசகம் சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள் எனும் நூலிலிருந்து. (சிதம்பரம் சைவசித்தாந்த மகா சமாஜ அறுபதாண்டு நிறைவுவிழா மலர்).

# திணைக்களச் செய்திகள்

## மரநடுகையும், சூழல் பாதுகாப்பும்

சூழல் பாதுகாப்பும் இயற்கையின் சமநிலையைப் பேணலும் இன்று உலகளாவிய வகையில் ஓர் இயக்கமாகப் பரிணமித்துள்ளன. இது கைத்தொழில் வளர்ச்சியின் விளைவாக எழும் சூழலின் பாதிப்புக்களையும், மனிதனின் பொருளாசை, கட்டுப்பாடற்ற நுகர்வு நாட்டம் (Consumerism), ஆகியவற்றின் தீய விளைவுகளையும் தடுப்பதை நோக்கமாகக் கொண்டது. இது ஓர் நவீன இயக்கமாயினும் இந்து மதச் சிந்தனை மரபில் காணப்படும் சூழல் பாதுகாப்பு, இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு பற்றிய கருத்துக்கள் புதிய சிந்தனைகளுக்கு வளமூட்டுவனவாகும்.

சங்கப்பாடல்கள், முருகனை, இயற்கை எழில்கொழிக்கும் குறிஞ்சி நிலத்தின் தெய்வமாக வருணிக்கின்றன. இவன் 'குறிஞ்சிக்கிழவோன்' 'குறிஞ்சி ஆண்டவர்' என்று போற்றப்பட்டான். இன்றும் வேம்பு 'சக்தி' தெய்வத்தின் மரமாகப் போற்றப்படுகிறது. பராசக்தியை 'காடுகிழாள்', 'கண்ணமர் செல்வி' என இலக்கியங்கள் கூறும்.

இயற்கையை இறைவனின் பாகமாகவும் உறைவிடமாகவும் காணும் இந்து மதத்தத்துவத்திற்கு இயற்கையை அழிப்பதும் மாசுபடுத்துவதும் ஒவ்வாத கருத்துக்கள்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட தேசிய மர நடுகைத் திட்டத்துடன் ஒன்றிணைந்து இந்து ஆலயங்கள் தோறும் பயன்தரும் மரக்கன்றுகளும் பூமரங்களும் நாட்டப்பட்டன. மரநடுகை ஆரம்ப வைபவம் சம்பிரதாயபூர்வமாக கண்டி கட்டுக்கலை விநாயகர் ஆலயத்தில் செஞ்சந்தன மரக்கன்று நாட்டப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாட்டின் பிற ஆலயங்களிலும் தொடர்ந்து இப்பணி மேற்கொள்ளப்பட்டது. இவ் வைபவங்கள் இந்துமதச் சிந்தனை மரபில் காணப்படும் இயற்கையைப் பேணும் கருத்துக்கள் மக்கள் மனதில் ஆழப்பதியவைத்தலை நோக்கமாகக்கொண்டிருந்தன.

* இந்துமதத் தத்துவங்களையும், ஆன்மீக நெறிகளையும் கருப்பொருளாகக் கொண்டு ஆங்கிலத்திலும், தமிழிலும் பேருரைகள் மாதமிருமுறை திணைக்களத்தால் நடாத்தப்படுகின்றன. துறைபோன அறிஞர்களின் புலமையும், அநுபவமும் மிக்க பேருரைகள் இதுவரை இருபத்திரண்டு நிகழ்த்தப்பட்டுள்ளன. திணைக்களம் தற்போது இவற்றை நூல் வடிவாக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. அத்துடன் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ள இவை, ஒலிப்பதிவு நாடாக்களாக விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

* 15. 09. 90 அன்று இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் திரு. சபாரத்தின முதலியார் எழுதிய ''இந்துசமயத்தின் இன்றியமையாமை'' என்னும் ஆங்கில நூலின் வெளியீடு நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் பி. பீ. தேவராஜ் அவர்கள் தலைமை வகித்த இந்நிகழ்ச்சிக்கு மேல்மாகாண சபை ஆளு

நர் மாண்புமிகு எஸ். சர்வானந்தா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்துசமயத் திணைக் களத்தின் முன்னாள் பணிப்பாளர் திரு. வி. என். சிவராஜா அவர்கள் ''இந்துமதத்தின் முக்கிய சிறப்புக்கள்'' என்னும் தொனிப்பொருளில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

* திணைக்களம் 26. 09. 1990 அன்று மாலை, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் நவராத்திரி விழாவை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்ச்சிக்கு இந்தியத் தூதுவர் மேன்மை தங்கிய என். என். ஜா அவர்களும், ஸ்ரீமதி ஜா அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன், பேராசிரியர் சி. சூரியகுமாரன், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன பொதுமுகாமையாளர் எஸ்.ஜீ. உடலமத்த ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். நவராத்திரி பற்றிய ஆங்கில சொற்பொழிவுகள், மதுரை ஆர். முரளிதரன், ஆர். மணிமேகலை ஆகியோரின் பரதநாட்டியம், முத்தேவியருக்கும் கவிதை சமர்ப்பணம், புல்லாங்குழல், வீணை இசைநிகழ்ச்சி என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன. இந்நிகழ்ச்சிக்கு மாண்புமிகு அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமை தாங்கினார்.

* தரமான திரைப்பட இரசனையை வளர்க்கும் நோக்குடன் 'திரைப்பட வட்டம்' எனும் அமைப்பினை ஒக்டோபர் 19 ஆம் திகதி காப்புறுதிக் கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் திணைக்களம் ஆரம்பித்து வைத்தது. அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமை வகித்த இந்நிகழ்ச்சிக்கு திரைப்பட ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், கலா ரசிகர்கள் பலர் கலந்து கொண்டனர். இவ்வட்டம் ஆரம்பமாக முக்கிய கர்த்தாவான திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் 'திரை இரசனை' பற்றி விளக்கிப் பேசினார். நிகழ்ச்சியில் இந்திய ஜனாதிபதியின் பரிசு பெற்ற, பாலு மகேந்திராவின் 'வீடு' எனும் திரைப்படம் ஒளிபரப்பப்பட்டது. தமிழ்க் கலைத்துறைப் பங்களிப்பிற் சிறந்த முயற்சி எனவே இதனைக் குறிப்பிட வேண்டும்.

* உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடும் முகமாக, 27. 10. 1990 அன்று சிறுவர் பராமரிப்பு, நன்னடத்தைத் திணைக்கள ஆணையாளரின் அனுசரணையுடன், மேல்மாகாண அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே 'சிறுவர் உரிமைகளும், கடமைகளும் பொறுப்புக்களும்'' எனும் தலைப்பில் பேச்சுப்போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. இப்போட்டி ஏனைய மாகாணங்களுக்கும் விரிவு படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

* திணைக்களத்தின் அனுசரணையோடு, கொழும்பு – 02, கியூ வீதியில் அமைந்துள்ள, அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் ''கார்த்திகை தீபம்'' விளக்கீடு வைபவம் எதிர்வரும் 01.12.1990 இரவு நடைபெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* 28. 12. 90ஆம் திகதி வைகுந்த ஏகாதசி விழாவை, பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலய யாகசாலைப் புண்ணிய பூமியில் சிறப்பாக நடாத்த திணைக்களம் ஆயத்தங்களை மேற்கொள்கிறது.

# அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் சொற்பொழிவுத் துளிகள்

* ''இந்து மாகடலை அமைதி மண்டலமாக்க வேண்டுமென்பது 1964ஆம் ஆண்டு கெய்ரோவில் இலங்கை முன்வைத்த கோரிக்கை ஆகும். இக்கோரிக்கை ஐ. நா. சபையில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது. வல்லரசுகளின் தலைவர்கள் இதற்கு முடிவுகாண வேண்டும். இப்பிராந்தியத்தில் பதற்றம் நீங்கி, அமைதிநிலவ வைப்பது வல்லரசுகளின் தலைவர்களது பொறுப்பாகும்.'' 29. 09. 90 இல் உல்லாச கிராமிய தொழிற்றுறை அமைச்சின் கேட்போர் கூடத்தில், வீரகேசரி சிரேஷ்ட உதவி ஆசிரியர் கண. சுபாஷ் சந்திரபோஸின் 'இந்துமா கடல் அமைதி மண்டலம்'' நூல் வெளியீட்டு விழாவின்போது.

* ''யதார்த்த பூர்வமான மனிதவாழ்வில் கண்ட நிகழ்வுகள் அவலங்கள் என்பவற்றை எழுத்து ஓவியமாக வடித்தவர் என். எஸ். எம்.ராமையா. மலையக சமுதாயத்திலே புரட்சிகள் உண்டுபண்ண அவர் கதை எழுதியதாகத் தெரியவில்லை''. 23.09.90இல் மலையக எழுத்தாளர் மன்றம் இலங்கை முற்போக்கு சங்கம், மலையக கலை இலக்கிய பேரவை என்பன இணைந்து, கொழும்பு மெயின் வீதி முஸ்லிம் வாலிப முன்னணி மன்றத்தில் ஒழுங்கு செய்திருந்த அமரர் இராமையா அஞ்சலிக் கூட்டத்தில்.

* ''இந்துக்கள் இயற்கையை அரவணைத்து, மீறாது வாழ்ந்தார்கள். வழிபட்டார்கள். ஆலயத்தலங்கள் தோறும் தலவிருட்சங்கள் வழிபாட்டிற்குரியனவாகின. இயற்கை மூலிகைகளினால் நோயைக் குணமாக்குவது கூட நாம் இணைந்து வாழ்வதை உணர்த்துகின்றது. வேறுபாடுகளிடையே அழகாகத் தெரியும் இயற்கையை புரிந்துகொண்டால் இன்பமாக வாழலாம். அவரவர் இனப் பண்பாடுகளைக்கூட பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ளலாம்''

01. 10. 90இல் அட்டன் மாணிக்கப் பிள்ளையார் ஆலய வளவில் மரக்கன்று நடும் வைபவத்திற் கலந்து கொண்டபோது.

* ''நூறு வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பூர்வீகத்தைக்கொண்ட மலையக மக்கள் தமிழகத்திலிருந்து இங்கு வந்தபோதே தம்முடன் கொணர்ந்த பாரம்பரியக் கலைகளை இன்றும் பேணி வருகின்றனர். அவற்றுள் ஒன்றான பொன்னர்சங்கர் என்ற அரசகுமாரர்களைப் பற்றிய கூத்து, அவர்களின் சாகசங்கள், போர், இராஜதந்திரம் போன்றவற்றை உணர்ச்சிபூர்வமாக எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய கலைகள் அருகிவிடாதவாறு அடுத்த தலைமுறைக்கும் நாம் கையளிக்க வேண்டும்.''

02. 10. 90இல் கொஸ்லாந்தை மீரியபெத்த மாமுனி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளின்போது.

''சாதி மத இன வேறுபாடுகளுக்கப் பால் இறைவனையே ஜோதியாகக் கண்டு, அன்பையும் கருணையையும் போதித்தவர் இராமலிங்க வள்ளலார். வாடிய பயிரைக் கண்டுகூட வாடினார். ஜீவகாருண்ணியத்தை போதித்தார். மனித சமத்துவத்தை உணர்த்தும், சமரச சன்மார்க்க யோகத்தை உலகிற்களித்தார்'' 05. 10. 90இல் டொறிங்டன் முருகன் ஆலயத்தில் அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கம் ஒழுங்கு செய்திருந்த இராமலிங்க வள்ளலார் பிறந்த தின விழாவின்போது.

''சென்ற தீபாவளி நாளிலும் இத் தீபாவளி நாளிலும் உங்களுடன் கலந்து உறவாடக் கிடைத்தமை மட்டில்லா மகிழ்ச்சியைத் தருகின்றது. தீமைகள் தொலைந்து, நன்மைகள், வளர வழிசெய்த நாளாக தீபாவளியின் தத்துவத்தை நாம் உணர்கின்றோம்.

மனிதனுக்கு வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் மாறி மாறி வருகின்றன. நல்லவைகளுக்கும், தீயவைகளுக்கும் ஒரு எல்லைக்கோடு உண்டு. சோகத்தின் விளிம்பிலேயே தத்துவங்களும் காவியங்களும் தோன்றின. தெரிந்தோ தெரியாமலோ குற்றங்களைச் செய்து கைதிகளாகிவிட்ட உங்களிலும் திறமைமிக்கவர்கள் உள்ளனர். அத்தகைய திறமைகள் இறைவனின்கொடை என்றே கொள்ள வேண்டும்'' தீபாவளித் திருநாளில், வெலிக்கடைச் சிறைச்சாலை இந்துக்கைதிகள் ஒழுங்கு செய்திருந்த தீபாவளி பூசையில் கலந்துகொண்டு பேசும்போது.

## புத்தக உலகம்

இப்பகுதியில் பல்வேறு துறைசார்ந்த, தமிழ் மொழி, இந்துசமய தத்துவ நூல்களை அவ்வப்போது அறிமுகப் படுத்துகின்றோம். பயிலப்பயில எமது அறிவும் சிந்தனையும் விசாலிக்கும் என்பதனால் ஆர்வமிக்கோர் இந்நூல்களைப் பற்றி அறிந்தும், இவற்றைக் கற்றும் பயன் பெறலாம். இம்முறை, தமிழகத்திலே பிறந்து சமரச சன்மார்க்கமெனும் அன்பு நெறியைப் பரப்பிய அருட்பெருஞ்ஜோதி திருவருட்பிரகாச வள்ளலார் பற்றிய இரு நூல்களை அறிமுகம் செய்கின்றோம்.

1. சமயம் கடந்த நெறி
   எழுதியவர்— தகடூரான்
   வெளியீடு— தேன்தமிழ்ப் பதிப்பகம், சேலம், தமிழ்நாடு.

இந்நூல், சமயங்களுக்கு அப்பால் ,போட்டியும் பூசலுமற்ற மனித குலத்தைக் காண விரும்பிய வள்ளலாரின் தத்துவங்களை விளக்குகிறது.

2. அருட் பெருஞ்ஜோதி அட்டகம்
   எழுதியவர்— சரவணானந்தா
   வெளியீடு— இராமலிங்கர் பணி மன்றம், சென்னை.

இந்நூல், வள்ளலார் கூறும் மரணமிலாப் பெருவாழ்வு எனும் ஆழமான ஆன்மீக அநுபவத்தை விளக்குகின்றது.

# தாவரம் போற்றுதும்

**செப்டெம்பர் மாதம் 17ம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் மர நடுகை இயக்கமொன்றினை மத்திய சூழல் அதிகார சபை ஒழுங்கு செய்துள்ளது. இதனையொட்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு மிகப்பெரும் அளவில் ஆலயங்கள் தோறும் தலவிருட்சங்களையும் நந்தவனங்களையும் அமைக்க முனைப்பான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அது தொடர்பாக இக் கட்டுரை வெளியாகின்றது.**

இயற்கையின் விநோதங்களையும், பிரபஞ்சத்தின் பரப்பையும் போற்றி இயற்கையையே தெய்வமாக வழிபட்டது இந்து மதம். ஆயிரமாயிரம் ஆண்டுகால இந்து மத வாழ்க்கை முறை இயற்கையோடு இணைந்ததாக அமைந்திருந்தது. இயற்கையை வியந்து, ரசித்து இறை இன்பம் துய்த்தோர் எமது முன்னோர்கள்.

அதிலும் தாவர இராச்சியம், மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருப்பதையும் பல்வேறு வழிகளில் இன்றியமையாததாக இருப்பதையும் நாம் மறுக்கமுடியாது. உணவாக, வீடு கட்டும் துணைப் பொருளாக, மருந்து மூலிகையாக தெய்வீக அம்சம் மிக்க மலர்களாக தாவரப்பாகங்கள் விளங்குகின்றன.

இந்துமதம் தாவரங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றது. தாவரங்களை இறைவனோடு ஒப்பிட்டு பேசுகின்றன எமது பழம் புராணங்கள். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றோடு, தலவிருட்சங்களாக மரங்களும் மகிமை பெற்றன. இன்றும் தமிழகத்தின் பல்வேறு ஆலயங்களிலும் பல்வேறின மரங்கள் தலவிருட்சங்களாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். இவற்றை இந்துக்கள் வழிபட்டனர், வலம்வந்தனர். வில்வமும், வேம்பும், பாதிரியும், சந்தனமும் மனதுக்கும் உடலுக்கும் நோய்போக்கி ஆன்மசக்தியை வளர்ப்பனவாக அமைந்தன.

செடிகளும், கொடிகளும், மரங்களும் தந்த அழகுமலர்கள் இறைபாதத்திற்கு அர்ப்பணமாகின. இவற்றுளெல்லாம் துளசி இன்னும் பெருமை பெற்றது. புனிதமான ஒரு செடியாக மாடம் அமைத்து வழிபடுமளவு தெய்வீகம் பெற்றது. பூக்களின் நறுமணமும், மென்மையும் பூஜைக்குரியனவாகின.

எனவே ஆலயங்களை நிலையங்களாகக் கொண்டு அழகிய நந்தவனங்கள் தோன்றின. ஆலயந் தொழுவதோடு ஆலய நந்தவனத்தையும் தொழுவது சாலவும் நன்றெனப் பாரம்பரியம் பேணப்பட்டது.

இவை அனைத்திற்கும் மேலாக ஆயுர்வேதம் எனப்படும் மூலிகை மருத்துவம், மனதுக்கும் உடலுக்கும் புதிய தெம்பை அளித்து நோயற்ற தன்மையை உருவாக்குவதில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக முதன்மை பெற்றது. ஞானதிருஷ்டி மிக்க ஆன்மீக ஞானிகளின் உள்ளார்ந்த அறிவின் பயனாகப் பெறப்பட்ட இம் மருத்துவம் உலகில் நீண்டகாலப் பாரம்பரியத்தை உடையது. இன்று அபிவிருத்தி அடைகின்ற ஒரு விஞ்ஞானமாகவும் அமைந்துள்ளது.

ஐம்பூதங்களான நீர், நிலம், வாயு, அக்கினி, ஆகாயம் ஆகியவற்றால் உருவாவதான மூன்று தோஷங்களே ஆயுர்வேதத்தில் முக்கியமாகக் கருதப்படுகின்றன. வாயுவினால் உருவாகும் வாதமும், நீரினாலும் நெருப்பினாலும் உருவாகும் பித்தமும், நீரினாலும், நிலத்தினாலும் உருவாகும் கபமுமே அவை. இம் மூன்று தோஷங்களுக்கும் ஒவ்வொரு மனிதரிலும் வெவ்வேறு அளவில் வேறுபடுகின்றன. இத் தோஷங்களோடு தாவர மூலிகைகளும் தொடர்பு கொள்கின்றன.

தாவரங்கள் சூரிய சக்தியை எமது உடலுக்குள் பாய்ச்சுகின்றன. இச் சக்தி எமது ஆன்மாவுக்கு புகுத்தப்படுகின்றது. தாவரங்களினூடாக சூரிய சக்திக்கும் எமது ஆன்மாவுக்கும் ஒரு பிணைப்பு ஏற்படுகின்றது. ஒரு மூலிகை அல்லது தாவரத்தின் முறையான பயனைத் தெரிந்துகொண்டால் அதிலிருந்தும் முழுமையான சக்தியை நாம் பெற்றுக்கொள்ளலாம். பலன் தெரிந்து பயன்படுத்தப்படும். தாவரங்கள் எமது நரம்புத் தொகுதிக்கு வலிமை ஊட்டுகின்றன. இங்ஙனம் தாவரத்திற்கு ஒரு தூய்மைத் தன்மையையும் தெய்வீகத்தன்மையையும் அளிக்கும்போது முழு இயற்கையோடும் நாம் தொடர்புகொள்கிறோம். இயற்கை அன்னையை தெய்வமாக வணங்குகின்றோம். அதன்பின் எமக்கு சக்தியூட்டி வாழ்விக்கின்ற தாவரங்கள் எமக்கு மந்திரங்கள் போல அமைந்து இயற்கையின் சக்தி சொரூபத்தை உணர்த்தி நிற்கின்றன.

இதனாலேயே பல நூற்றாண்டுகளாக தாவரங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. எமது முன்னோர்கள் தாவரங்களை பூஜைக்குரியவையாக பயன்படுத்தியதையும் நாம் நினைவுகூரலாம். ஏனெனில் எமது உடலின் ஒவ்வொரு இழையத்தோடும் இத் தாவர சக்தி தொடர்புகொண்டு அதன் பயனை அளிக்கிறதென்பதை நாம் மறுக்கமுடியவில்லை. அஷ்டமாசித்திகளைப் பெற்ற சித்தர் பெருமக்கள் தாவரப்பாகங்களிலிருந்து நோய் தீர்க்கும் மருந்துகளை ஆக்கிவைத்தனர். அவை லேகியம், சூரணம், கஷாயம், தைலம், குளிகை என்றெல்லாம் பெயர் பெற்றன. தாவரப் பாகங்களான இலை, பூ, கனி, பட்டை, வேர், தண்டு, சாறு, தேன், அனைத்துமே குறித்த நோய்களை குணப்படுத்தும் எனக் கண்டறிந்தனர் எமது சித்தர்கள்.

தாவர உணவையே எமது மனச்சாந்திக்குரிய உணவாக எமது முன்னோர் வலியுறுத்தினர். ரஜோ, தமோ, சத்வ குணங்களில் இறைவனை வழுத்தும் தன்மை நிறைந்த சாத்வீக புருஷர்களாக ஆக்கும் தன்மை தாவர உணவிற்கே உண்டென்பது புராதன காலத்திலிருந்தே எண்ணப்பட்டு வந்த ஒரு கருத்தாகும். இன்றும் பல நாடுகளில் பல விஞ்ஞானிகள் இக் கருத்தை ஏற்பதையும் நாம் கருத்திற் கொள்ளலாம்.

இவ்வாறு தாவரப் பயன்களை பலவாறு, பல்வேறு நோக்குகளில் நாம் ஆய்வு செய்யக்கூடும். எமது வாழ்வின் ஒவ்வொரு கணமும் தாவரத்தோடும், இயற்கையோடுமே நாம் உறவாடுகின்றோம்.

நீண்ட நெடுங்காலமாக இயற்கையை அழிக்கும் செயலை நாம் மேற்கொண்டதால் வயல்வெளிகள், மணற்பரப்பாக, மாறி வரண்டுவிட்டன. இப்போது எமது அறியாமையிலிருந்து விழித்துக்கொள்வோமாக. சிறிது ஆழ்ந்து சிந்தித்தால் தாவர உலகின் தாற்பரியத்தை நாம் புரிந்துகொள்ளலாம். இன்னும் தாவர இராச்சியத்தின் அளவிலா அற்புதங்களை நாம் அறியவேண்டும். தாவரங்களை நாம் போற்றிப் பேண வேண்டும். அந்த இயற்கையின் அழகுணர்விலும் எம்மை வாழ்விக்கும் கருணையுணர்விலும் நம்மை பறிகொடுக்க வேண்டும். எமது எதிர்கால சமுதாயம், மனிதகுலம் நன்மை பெற்றுய்யுமாறு இன்றே நாம் இயங்க வேண்டியவர்களாக உள்ளோம்.

மரம் நடுதலையும், நந்தவனங்கள் உருவாக்குவதையும் எமது கட்டாயக் கடப்பாடாக மேற்கொள்வோமாக. எம்மைச் சூழவுள்ள இயற்கை வரண்ட பாலையாக இல்லாமல் பூத்துக் குலுங்கும் சோலையாக இருக்கட்டும். வானம் பொய்க்காது பொழியட்டும். பூமி வளம் மிக்கதாகட்டும். எம்மாலான பங்களிப்பாக மரமும் பயிரும் வளர்ப்போம். ஆலயங்கள் தோறும் தல விருட்சங்கள் தழைக்கட்டும். பூமாலை புனைந்து இறைவனைப் புகழ்ந்து ஏத்த பூவனங்கள் பூக்கட்டும். நோய் பிணி தீர்க்கும் மூலிகைகள் முளைக்கட்டும். தேனாலும் தினையாலும் தெம்பு கிடைக்கட்டும். தென்னையும், பனையும், மாவும், பலாவும் பெருகிப் பெரும் பயன் தரட்டும். இன்று தொடங்கும் இயக்கம், இடை நின்றுவிடாது என்றும் வளரட்டும். இயற்கையோடு இணைந்து வாழும் இன்ப உலகை இனியாவது ஆக்குவோமாக.

ம. சண்முகநாதன்,

# கொழும்பு மாநகர் கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

இலங்கைத் திருநாட்டில் சிவன் உறையும் திருத்தலங்கள் பலவுண்டு. கொழும்பு மாநகரிலே சைவத்தின்முழுமுதற்பொருளை உணர்த்தி நிற்கும் சிவத்தலத்தில் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் முதன்மை வகிக்கின்றது. இலங்கையிலே கொழும்பு மாநகரை அணி செய்யும் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த ஆலயமாக இது விளங்குகின்றது. தமிழகத்தில் பண்டைத் தமிழ் மன்னர்களால் எழுப்பப்பட்ட பெருங் கற் கோயில்களைப் போன்று காலத்தால் அழியாத வரலாறு படைக்கும் பாணியில் இலங்கையில் அதுவும் தலைநகரானகொழும்பில் முழுக்க முழுக்க கருங்கல்லால் எழுப்பப்பட்ட சைவத் திருக்கோயில் இதுவாகும். கருங்கல்லிற்பொறிந்த சிற்பங்கள் நிறைந்த தூண்கள் கோயிலின் உள்ளே கண்ணைக் கவரும் விதத்தில் அழகுபடுத்தப்பட்டுள்ளன. மூலஸ்தானம் கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கும் அதே வேளை உட்பிரகாரம் வரை கருங்கல்லாலே தளம்போட்டு மூடப்பட்டுள்ளது.

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை கொழும்பு மாநகரிலே உருவாக்கிய பெருமை நமது நாட்டு பெருமக்களில் ஒருவரும், சைவ அபிமானியும் தேசிய வீரருமான சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களையே சாரும். தென்னகத்திலே பண்டைய பல்லவ சோழ மன்னர்கள் கட்டிய கருங்கோயில்களையும் பொலன்றுவையில் காணப்படும் சோழர் காலத்து கருங்கோயில்களையும் பார்த்ததன் விளைவாக கற்கோயில் ஒன்று எழுப்பவேண்டும், அதுவும் கொழும்பு மாநகரிலே அது தலை நிமிர்ந்து நிற்கவேண்டும் என்ற பேராவல் கொண்டவராக இருந்தார் இராமநாதன். இவரது எண்ணத்திற்கு ஆதரவு கொடுக்க யாரும் முன்வரவில்லை.

பண்டைய அரசர்கள் பல தலைமுறைகளில் கட்டிய கருங்கோயில்போல் தலைநகரில் கட்ட நினைப்பது மடமைத்தனம் என்று எண்ணி நகையாடியவர்களை நமம் புடைக்கும் வகையில் தன் எண்ணத்தில் கண்ணாயிருந்து இப் பெரும் பணியை தொடங்கினார்.

தென் இந்தியா சென்று கோயில் கட்டிடக் கலையில் கைதேர்ந்த சிற்பக் கலைஞர்களை அழைத்து வந்தார். ஆலயத்திற்கு தேவையான கருங்கற்கள் வெயாங்கொடையில் இருந்து கொண்டுவரப்பட்டன. 1907ஆம் ஆண்டு கருங்கல் வேலை ஆரம்பமாகியது. தொடர்ந்து ஐந்து வருடங்கள் நடைபெற்றதிருப்பணி வேலைகள் 1912ஆம் ஆண்டு முற்றுப்பெற்றது. அப்போதே இருபது லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு ஏற்பட்டது. இராமநாதன் அவர்கள் இத் திருப்பணியை தாமே நின்று மேற்பார்வை செய்ததோடு சிற்பிகளின் பணியை, அவர்கள் சிவன்மேல் செலுத்தும் அன்புக்கு உரிதாக்கி செலவையோ சிரமத்தையோ பாராது உழைத்ததன் பலனாக இன்று சிறந்ததொரு கற்கோயில் எமக்கு கிடைக்கவும் தலைநகரில் சிவனாலயம் ஒன்று உருவாகவும் சேர். இராமநாதன் அவர்கள் ஆற்றிய பணியை ஒரு நாளும் மறக்கமுடியாது.

கற்கோயில் எழுவதற்கு முன்பே இங்கு ஒரு கோயில் இருந்தது. இதைக் கட்டியவர் இராமநாதன் அவர்களுடைய தந்தையான பொன்னம்பல முதலியாராவார். 1857ஆம் ஆண்டு கோயிலில் கும்பாபிஷேகம் நடாத்தி வைத்தவரும் இவரே. சிறந்த சைவரும், செல்வருமான முதலியார் சைவத்துக்கு நிலையான பணிகள் செய்ய விரும்பினார். அக் காலத்தில் கொழும்பில் வாழ்ந்த சைவ மக்களுக்கு முறையான கோயில் இல்லாத குறையை உணர்ந்தார். சிவன் கோயில் ஒன்று கட்டும் எண்ணம் சிந்தையிற் குடிகொண்டது. இறைவன் சித்தம் எப்படியோ என எண்ணிய அவர் மனதில் இறைவன் கனவில் தோன்றி மாதுளம் பழம் ஒன்று கொடுத்ததாகவும் அதை அவர் உடைத்து பார்த்தபோது சிவன் — உமை உருவம் காணப்பட்டதாகவும் அதன் பின்னரே கோயில் கட்டும் ஆர்வம் தடுக்க முடியாத ஆர்வமாக உருவாகியது. இதன் காரணமாக கொச்சிக்கடை பகுதியில் ஐந்து

ஏக்கர் காணி வாங்கி இந்தியாவில் இருந்து கோயில் கட்டும் சட்டடக் கலைஞரை வரவழைத்து இரண்டு வருடம் ஓயாது ஒழியாது வேலை செய்து அழகிய ஆலயம் ஒன்று உருவாக்கினார். இதுவே ஆரம்பத்தில் உருவான பொன்னம்பலவாணேஸ்வரம். மூலத்தானத்தில் மகாலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தமது இல்லத்தில் தாம் நித்தியம் பூசித்துவந்த பால இயந்திரத்தை அம்மன் சந்நிதியில் அம்மன் திருவுருக்கடியில் பிரதிஷ்டை செய்வித்தார். அவரால் உருவாக்கப்பட்ட சிறு ஆலயம் அவரது மகனான இராமநாதன் அவர்களால் மாபெரும் கோயிலாயிற்று. 1912ஆம் ஆண்டு முடிவுபெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்வாலயம் பூசை சிறப்பும், வழிபாட்டுச் சிறப்பும் மிகுந்த ஆலயம். தினமும் ஆறுகாலப் பூசை தவறாமல் நடைபெறுகின்றது. இலங்கையில் எங்குமில்லாத நித்தியாக்கினி மகா மண்டபத்திற் காணப்படுவது இவ்வாலயத்தின் தனிச் சிறப்பாகும். சிதம்பரத்திலும் இது உண்டு. சம்பந்தர் தமது தேவாரத்தில்:

''கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
 செற்றார் வாழ்தில்லை''

என்று கூறுவதில் இருந்து எரியோம்புதல் என்பது நித்தியாக்கினியைக் குறிக்கும். எப்பொழுதும் அக் குண்டத்தில் நெருப்பு இருப்பதனால் நித்திய அக்கினி எனப் பெயர் பெறுகின்றது. இக் கோயிலில் காலை ஒரு மணிக்கும் மாலை ஏழு மணிக்கும் நடைபெறும் பூசைகளில் நித்தியாக்கினி வளர்க்கப்படும். அதன் பின்னர் சுவாமி, அம்பாள் சமேதராக சிறிய தேர் ஒன்றில் உள்வீதி வலம் வருவார். இது நித்திய உற்சவம் எனப்படும். இவ்வுற்சவம் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் தினமும் நடைபெறுவது அதன் பெருமையை எடுத்தியம்புகின்றது.

பிரதோஷ தினங்களில் இங்கு பிரதோஷ உற்சவம் நடைபெறுவதோடு, மாதப்பிறப்பு அன்று சங்கிராந்தித் தீர்த்த விழாவும் ஒவ்வொரு மாதமும், பௌர்ணமி அன்று ஸ்ரீ சக்கர பூசையுடன் இராஜ இராஜேஸ்வரி உற்சவமும் நடைபெறுகின்றன.

இவ்வாலயத்தின் மகோற்சவம் பங்குனி மாதத்தில் பத்து நாட்களுக்கு நடைபெறும். கொழும்பு மாநகரில் இவ்வாலயத்தில் மட்டுமே ஐந்து தேர்கள் இழுக்கப்படுகின்றன. விநாயகர், சோமஸ்கந்தர், அம்பாள், சுப்பிரமணியர், சண்டேசுவரர் ஆகிய மூர்த்திகள் தேர்களில் உலாவருவர். அம்பாள் தேரைப் பெண்கள் மட்டுமே இழுத்து வருதல் சிறப்பாக இவ்வாலயத்தில் உண்டு. பங்குனி உத்தரம் அன்று தீர்த்தம் நடைபெறக்கூடியதாக உற்சவங்கள் முன் கூட்டியே தொடங்கி இனிதாக நடைபெற்று நிறைவுபெறுகின்றன. அண்மைக் காலத்தில் தீர்த்தக்கேணி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆடிப்பூசத்துக்கு முந்திய ஒன்பது தினங்களும் ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பாளுக்கு தினமும் அபிஷேகம், பூசை, யந்திர பூசை இலட்சார்ச்சனை, ஓமம், உற்சவம் ஆகியன இடம்பெற்று இறுதி நாளான ஆடிப் பூரத்தன்று அம்பாளுக்கு திருவுலாவுரு சிறப்பாக நடைபெறுகின்றது. கந்தசஷ்டிக் காலத்தில் தினமும் அபிஷேகம், பூசை, யாக பூசை, திருவுலா என்பன இடம்பெறுகின்றன. தைப்பூசம், மாசிமகம், மகா சிவ ராத்திரி ஆவணிமூலம், நவராத்திரி, திருவெம்பாவை, நடேசர் அபிஷேக தினங்கள் ஆகியனவும் சிறப்பாக இவ்வாலயத்தில் இடம்பெறுகின்றன. மகாசிவராத்திரி அன்று திருக்கேதீச்சரத்துக்கு அடுத்தபடியாக பக்தர்கள் அதிகம் கூடும் இடமாக இவ்வாலயம் திகழ்கின்றது. நடேசர் அபிஷேகத் தினங்களுள் மார்கழித் திருவாதிரையும் ஆனி உத்தரமும் தனிச் சிறப்புவாய்ந்த உற்சவங்களாக இவ்வாலயத்தில் மிளிர்கின்றன.

இத்தகைய தனித்துவமும் சிறப்பும் கொண்ட ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகம் சீராக நடைபெறுவதால் உற்சவ காலங்களில் மட்டுமல்லாது ஒவ்வொரு தினமும் பக்தர்கூட்டம் நிரம்பி வழிவதை காணக்கூடியதாக இருக்கின்றது. சைவத்தின் முழுமுதற் பொருள் சிவன் உறையும் இவ்வாலயம் சென்று எம் இன்னல்கள், தொல்லைகள் நீங்க அவன் திருப்பாதங்களைத் தொழுவோமாக.

—எஸ். தெய்வநாயகம்.

# அங்கும் இங்கும்

* நீண்ட நாட்களாகத் தேங்கிக் கிடந்த அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. 30.10.90ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் சுபமுகூர்த்தத்தில், அடிக்கல் நாட்டப்பட்டது. இந்து சமய, கலாசார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் உட்பட பல அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

* 27.10.90ஆம் திகதி அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்கள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து அகதிகளாக உள்ளோரை கண்டு அளவளாவினார். மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன், சாரதா இல்லம், விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆகியவற்றுக்கும் அமைச்சர் சென்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

* பாரதிதாசனின் நூற்றாண்டை யொட்டி, நவம்பர் 10ஆம் திகதி பண்டாரவளையிலும் 11ஆம் திகதி லுணுகலையிலும் பாரதிதாசன் விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

* கொழும்பு விவேகானந்த சபையின், சைவசமயப் பரீட்சைகள் 04.10.90ஆம் திகதி காலை வட கிழக்கு பகுதிகள் தவிர்ந்த, நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள 350 பாடசாலைகளில் நடைபெற்றன.

* சர்வதேச இந்து இளைஞர் அமைப்பு – ஒக்டோபர் மாதம் 13ஆம் 14ஆம் திகதிகளில், வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில் கருத்தரங்கொன்றினை நடாத்தியது. இதில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் இந்துக்களின் இன்றைய பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தனர்.

* நுவரெலியா இலங்காதீஸ்வரர் ஆலயத்தை விஸ்தரிப்பதற்கான அடிக்கல் 02.11.1990 அன்று அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களால் நாட்டப்பட்டது. இதற்கான செலவு ரூபா 35 லட்சம் ஆகுமென காயத்திரி சித்தர் ஆர். கே. முருகேசு சுவாமிகள் அறிவித்தார். இவ்வாலய வளவில் ஆன்மீகத் தொண்டர் பயிற்சி, மூலிகைப் பண்ணை, சித்த மருத்துவப் பயிற்சி என்பனவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

* திருகோணமலையில், சிவயோக சமாஜம் அமைத்து அருளாட்சி புரியும் ஸ்ரீமத் கங்காதரானந்தா அவர்களின் பஜனை, மாதந்தோறும் முதலாம், மூன்றாம் சனிக்கிழமைகளில் பம்பலப்பிட்டி பிரான்ஸிஸ் மகாதேவா அவெனியூவில் தபால் நிலைய அலுவலர் திரு. கனகசிங்கம் அவர்கள் இல்லத்தில் நடைபெறுகிறது.

* தீபாவளி நாளான 17.10.90ஆம் திகதி புதன்கிழமை காலை, வெலிக்கடை சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் தீபாவளி பூஜைகளை ஒழுங்குசெய்து நடாத்தினர். இந்துசமய, கலாசார, தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், அமைச்சின் செயலாளர் திரு. கே. சி. லோகேஸ்வரன், இந்து சமயத் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் உதவிப் பணிப்பாளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

* கடந்த 02.11.90ஆம் திகதி மாலை ஆறு மணிக்கு, பம்பலப்பிட்டி இந்து வித்தியாலயத்தில் திருமூலநாயனார் குருபூசை நடைபெற்றது. இந்துசமயத் திணைக்களத்தின் சார்பில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு. எஸ். தெய்வநாயகம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். இக் குரு பூஜையை ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.

# இந்து உலகம்

அமெரிக்கா :

* மிகப் பிரமாண்டமான அளவில் இந்தியக் கலைக் கண்காட்சி ஒன்றினை 1991ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் நடாத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை சுவாமி ஸ்ரீமத் பிரேமுக் மகராஜ் மேற்கொண்டு வருகின்றார். இக்கண்காட்சியைப் பார்வையிட பத்து லட்சம் பார்வையாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். இக் கண்காட்சியில் நான்கு முழுமையான ஆலயங்களும் உள்ளடக்கப்படுகின்றன. இதற்கு முன் இத்தகைய கண்காட்சிகள், இரண்டு இந்தியாவிலும், ஒன்று இங்கிலாந்திலும் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

* சைவ உணவுப் பிரியர்களை ஊக்குவிப்பதற்காக கலிபோர்னியாவில் 'வெஜிடேரியன் டைம்ஸ்' என்ற சஞ்சிகை ஒன்று வெளியிடப்படுகின்றது.

* யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளின் அமெரிக்கச் சீடரான ஸ்ரீமத் சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் 1970இல் அமெரிக்காவில் ஹவாய் தீவில் சிவன் ஆலயம் ஒன்றைக் கட்டினார். தற்போது சன்மார்க்க சரணாலயம் என்ற நிலையத்திற்காக பதினொரு ஏக்கர் நிலப்பரப்பில் 'இறைவன் ஆலயம்' ஒன்றை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார், முழுக்கவும் கற்களாலேயே அமையவுள்ள இறைவன் ஆலயம் அமெரிக்காவின் முதற் கற்கோயிலாக இருக்கும். 2000ஆம் ஆண்டளவில் கோயில் கட்டும் பணிகள் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியா :

* மகாராஷ்டிர மாநிலத்தில் தேனெயில் அமைந்துள்ள கீழைத்தேய 'கல்வி நிறுவனம்' கடந்த ஏப்ரல் மாதம் 'சூழலியலும் புராதன இந்தியாவும்' எனும் கருத்தரங்கொன்றினை நடாத்தியது. இந்தியாவின் பேரறிஞர்கள் பலர்இதில் கலந்துகொண்டு சூழலையும் வேதகால இந்தியாவையும் தொடர்புபடுத்தி ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். கருத்தரங்கின் இறுதியில் ''தேனெ தீர்மானம் — 1990'' என்ற இயற்கைப் பாதுகாப்புக்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

* உத்தர பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள அயோத்தியை இராமஜனனபூமியாகக் கருதி ஆலயமொன்றைக் கட்ட இந்து தீவிரவாதிகள் முயன்றனர். இதே வேளை, அங்குள்ள பள்ளிவாசலுக்கு இந்திய அரசு முழுமையான பாதுகாப்பை அளித்துள்ளது. அயோத்தி விவகாரம் இந்தியாவில் பற்றிஎரிகிறது.

சீசெல்சு :

* சீசெல்சு நாட்டு இந்துக் கோயில் சங்க மண்டபத்தில் கடந்த செப்டெம்பர் 28ஆம் திகதி நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இப் பூஜை தொடர்பாக இங்கு வாழும் இந்து மக்களுக்கென மேற்படி சங்கம், கோலப்போட்டி, பூமாலை கட்டும் போட்டி ஆகியவற்றை ஒழுங்குசெய்திருந்தது. நவராத்திரி விழா அன்று, இலங்கை இந்து சமய, கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் முன்னாள் இணைப்பதி

காரி திரு. எஸ். இரவீந்திரன் அமைச்சர் வழங்கிய இந்துசமய நூற்தொகுதி ஒன்றை சங்கத்திற்கு கையளித்தார். அத்துடன் திரு. இரவீந்திரன் அவர்களின் இன்னிசைப் பாடல்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. சங்க ஆதரவில் ஞாயிறுதோறும் கீதைப் பேருரைகள் இடம்பெறுகின்றன.

மலேசியா :

* மலேஷியாவில், மலேஷியா உல்லாசத் துறை அமைச்சின் அனுசரணையோடு ருத்ராதேவி சமாஜத்தின் ஆதரவில் ''தெய்வீக பாரம்பரியம்'' எனும் தலைப்பில் நாடளாவிய ரீதியில் பரத நாட்டிய போட்டியொன்று நடந்த ஆகஸ்ட் மாதம் நடாத்தப்பட்டது. பரதக்கலையின் பாரம்பரியப் பண்புகளைப் பேணவே இம் முயற்சி என சமாஜத்தினர் அறிவித்தனர்.

அமெரிக்கா :

* அமெரிக்காவின் வாஷிங்டன் மாநிலத்திலுள்ள வோலவோல சிறையே மிகவும் கடுமையும் பாதுகாப்பும் மிக்கது. இங்குள்ள கைதிகளுக்கு கூட்டுக்குள்ளேயே யோகாசனப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இப் பயிற்சிகளின் பின்பு மனம் மிகவும் அமைதியாக இருப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆதாரம் — 'இந்து சமயம் இன்று'

---

# திணைக்கள வெளியீடுகள்

### ஒலிப்பதிவு நாடா

சிவஸ்ரீ இரா. நீதிராஜ சர்மா அவர்களால் இயற்றப்பட்டு இசையமைத்துப் பாடப்பட்ட 'இராக யாகங்கள்' எனும் ஒலிப்பதிவு நாடா திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நாடாவில் பக்திப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

### நூல்கள்

* கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு உலகின் முதலாவது இந்துக் கலைக்களஞ்சியம் திணைக்கள வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலில் 'அ' முதல் 'ஈ' வரையுள்ள இந்துசமயச் சார்பான சொற்கள் அடங்கியுள்ளன. ஆராய்ச்சி நோக்கில், இந்நூல் ஒரு சாதனையெனவே கொள்ளத்தக்கது.

* இந்துமதத்தின் இன்றியமையாமை Essentials of Hinduism திரு. சபாரத்தினம் முதலியாரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்நூல் மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

* ''இந்துமதம் இந்துக்களுக்கும், இந்துக்கள் அல்லாதோருக்கும்'' Hinduism for Hindus and Non Hindus. பேராசிரியர் சீ. சூரியகுமாரன் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்நூல் அச்சில் உள்ளது.

* 'கோணமலை அந்தாதி' பண்டிதர் திரு. ஆர். வடிவேல் அவர்களால் எழுதப்பட்ட இந்நூலும் அச்சில் உள்ளது.

* 'பண்பாடு' — பருவ இதழ். பல்கலைக் கழக கலைப்பட்டதாரி மாணவர்கள், க. பொ. த உயர்தரப் பிரிவு மாணவர்களின் தமிழ், இலக்கிய, இந்துப் பண்பாட்டுத்துறைகளின் ஆர்வத்தை நோக்கமாகக்கொண்டு 'பண்பாடு' எனும் காலாண்டுப் பருவ இதழ் திணைக்களத்தால் வெளியிடப்படவுள்ளது. இது ஆய்வுக் கண்ணோட்டக் கட்டுரைகளை உள்ளடக்கியதாக அமையும்.

சிறுவர் பகுதி :

# உள்ளக் கமலத்தில் இறைவனுக்கு உறைவிடம் கட்டியவர் பூசலார் நாயனார்

இறைவன் தூய அன்புக்கு அடிமையானவன். உள்ளத் தூய்மையுடன் எவர் இறைவனை வழிபடுகிறார்களோ அவர்களை அரவணைத்து அன்பு செலுத்துவதில் அவன் பின் நிற்பது இல்லை. இந்த வகையில் பூசலார் என்னும் ஏழையின் மனதில் எழுப்பிய கோயிலில் குடிகொண்டு பொன், பொருள் ஏவலில் செறிந்த அரசன் கட்டிய கோயிலுக்கு இரண்டாவது இடம் தந்த கருணை எத்தகையது! அன்பு உள்ளத்திற்கு ஆட்கொண்ட இறைவனின் அரவணைப்புத்தான் என்னே!

திருநின்றவூர் என்னும் தலத்திலே பூசலார் எனும் சிவபக்தர் வாழ்ந்து வந்தார். ஏழையான இவருக்கு வெகு நாட்களாகச் சிவபெருமானுக்கு ஒரு கோயில் கட்டவேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் எங்கெங்கோ அலைந்து திரிந்தும், முயன்றும் பொருள் கிடைக்கவில்லை. பொருள் கிடைக்கவில்லையே என்று அவர் மனம் தளரவில்லை. ''நான் என்னுடைய இறைவனுக்கு மனத்திலே ஒரு திருக்கோவிலை கட்டுவேன்'' என திடசங்கற்பம் பூண்டார். குறித்த நாளில் சுபவேளையில் கோயில் அத்திவாரமிட நினைத்து கல், மண், சுண்ணாம்பு போன்றவைகளைச் சேகரித்து திருப்பணியைத் தொடர்ந்தார். கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், கல்யாண மண்டபம், யாக மண்டபம் என்று ஒவ்வொரு மண்டபமாக எழுந்து தூபி, இராஜகோபுரம், திருக்குளம், திருத்தேர் அனைத்தும் மனதிலே உருவாகின. யாவும் பூசலார் மனதில் பரிபூரணமாக முடிவுற்று மிளிர்ந்தபோது கோயில் கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய நாளையும் தன் மனதில் தியானித்து அதற்கு வேண்டிய பொருட்களையும் ஆயத்தம் செய்தார்.

இந்த வேளையில், பூசலார் மனக் கோயில் கட்டிய நாளில் இருந்து காஞ்சிபுரத்தில் காடவர்கோன் என்ற அரசன் ஏராளமான பொருளைச் செலவு செய்து கோயில் கட்டி பூசலார் மனதில் கட்டிய கோயில் கும்பாபிஷேகம் நடைபெறும் திகதியில் தானும் கும்பாபிஷேகம் நடத்த தீர்மானித்து ஒழுங்குகளை மேற்கொண்டான். முதல்நாள் இரவு சிவபெருமான் காடவர்கோனின் கனவில்தோன்றி, வெளிப்படையாக கட்டிய ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை ஒத்திவைக்கும்படியும் திருநின்றவூர் பூசலார் கட்டிய கோயிலில் தான் எழுந்தருளப் போவதாகவும் சொன்னார். அரசன் கண்விழித்து எழுந்து, கனவை நினைத்து, வியந்து பூசலார்கட்டிய கோயில் கும்பாபிஷேகத்திற்கு போவதற்காக பரிவாரங்களுடன் திருநின்றவூர் வந்தான். பூசலார் கட்டிய கோயில் எங்கே என அவ்வூர் மக்களைக் கேட்டபோது அவர்கள் பூசலார் உள்ளார், அவர் கட்டிய கோயில் எங்களுக்குத் தெரியாது எனக் கூறினர். அரசன் பூசலாரைக் கண்டு தொழுதான். ''நீங்கள் கட்டிய கோயில் எங்கே இருக்கிறது. உங்கள் கோவிலில் கும்பாபிஷேகம் என்று இறைவன் அருளிச்செய்தான். அதனால் வந்தேன்'' என்றவுடன் பூசலாருக்குப்

புல்லரித்தது. இறைவனை நினைத்துப் பரவசமானார். "அரசே நான் மனதில் தான் கோயில் கட்டினேன்" எனக் கூறி தான் கட்டிய கோயில் அமைப்பை அரசனுக்கு விளக்கியபோது அரசன் கட்டிய கோயில் அதே அமைப்பில் உருவானதை எண்ணி அரசன் அதிசயித்தான். பூசலாரை வீழ்ந்து வணங்கினான். பூசலார் நாயனாருடைய கோயிலின் பெருமையையும் சிவபெருமானுடைய திருவருளையும் வியந்து போற்றியதோடு பூசலார் கட்டிய கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்து அவர் ஆசீர்வாதம் பெற்று பிறிதொரு தினத்தில் தான் கட்டிய கோயில் கும்பாபிஷேகத்தை நடாத்தி மகிழ்ந்தான்.

பூசலார் தமது மனதிலே ஈசனை எழுந்தருளிச் செய்து, நாள் தோறும் வழிபட்டு இறைவனுடன் இரண்டறக் கலந்தார். சிறுவர்களே பார்த்தீர்களா! ஏழையானாலும் அன்புக்கு இறைவன் அடிமையாகி ஆட்கொண்ட விதத்தை! எனவே அன்பு உள்ளத்தால் ஆண்டவனை எதுவித சலனமும் இன்றி வழிபடும்போது அவன் எம் உள்ளத்தில் குடிகொள்கிறான் என்பதை பூசலார் நாயனாரின் உள்ளன்பு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

---

# இரசனை உணர்வின் வெளிப்பாடே கவிதைகள்!

— பேராசிரியர் நஸீர் அலி —

"புதுக் கவிஞன் சமுதாய சூழல்களையும் பிரச்சனைகளையும், நேரடியாகப் பேசுகிறான். மக்களுக்குப் புரிந்த இலகுவான மொழியில் தெரிந்த உதாரணங்களைக் கொண்டு பாடுகின்றான். காலத்துக்கேற்ற மாறுதல்கள் எப்போதும் தமிழ் இலக்கியத்தில் அனுமதிக்கப்பட்டும், ஆதரிக்கப்பட்டும் வந்தே உள்ளன.

புதுக்கவிதை முன்னோடிகளாக ந. பிச்சமூர்த்தி, சி. சு. செல்லப்பா ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களோடு, நா. காமராசன், மு. மேத்தா, அப்துல் ரகுமான் போன்றோரும் புதுக் கவிதைக்கு மெருகூட்டினார்கள். மனிதர்கள் எல்லோரும் கவிஞர்களே. ரசிப்பின் மூலம் உணர்ச்சி வசப்படும்போது தன்னை அறியாமல் வெளிவரும் உள்ளத்து ஓசைகளே கவிதைகளாகும்.

இன்று புதுக்கவிதை ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டமை காலத்தின் கட்டாயமாகும். சில புதுக் கவிதைகள் பற்றிய விமரிசனங்கள் காரசாரமாக எழுகின்றன. அதுகவிதைகளின் மேலுள்ள குறையல்ல. படைக்கும் கவிஞர்களின் குறையெனவே கொள்ள வேண்டும்."

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் எம்.ஏ. நஸீர் அலி "புதுக்கவிதை ஒரு பார்வை" எனும் தலைப்பில் கடந்த 24.10.90ஆம் திகதி பிற்பகல் காப்புறுதிக் கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் நிகழ்த்திய உரையில் ஒரு பகுதி. கௌரவ அமைச்சர்களான பி. பி. தேவராஜ், அல்ஹாஜ் அஸ்வர் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். இந்து சமய திணைக்களத்தின் தமிழ் அலுவல்கள் பிரிவு இதனை ஒழுங்கு செய்திருந்தது.

# மஹா மிருத்யுஞ்ஜெய ஹோமம்

மிருத்யுஞ்ஜெய ஹோமம் இறையருளால் கொழும்பு 12இல் கல்சரப் வீதியில் அமைந்துள்ள முத்துக்கிருஷ்ண மிஷனுக்கு சொந்தமான காணியில் கடந்த 04.10.90 வியாழக்கிழமை தொடங்கி மண்டலாபிஷேகமான 48 நாட்கள் நடைபெற்ற இந்த யாகம் 20.11.90 வியாழக்கிழமையுடன் நிறைவுபெற்றது.

சிவபெருமான், விஷ்ணு இவர்களை மையமாக வைத்து நடாத்தப்படும் இவ் யாகத்தின் மூலம் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைபெறவேண்டும் என்பதே முக்கிய குறிக்கோளாகும். இந்த இடத்தில் யாகம்நடப்பது முக்கியமானதல்ல. இதனால் பாரிய நன்மைகள் இலங்கை மக்களுக்கு கிடைக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், யாகம் முடிந்ததின் பிற்பாடு இக் காணியில் பெரியதொரு மூலிகை வைத்திய சாலை உருவாக இருப்பது இப்பகுதி மக்களுக்கு கிடைக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். ஏழை மக்களுக்கும் வயது போனவர்களுக்கும் உதவும் எண்ணத்துடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் இவ் வைத்தியசாலையில் எதிர்வரும் காலத்தில் பலர் பயன் பெறக்கூடிய வாய்ப்பு உருவாக உள்ளது மன மகிழ்ச்சிக்குரியது.

முத்துக்கிருஷ்ண மிஷன் உலகளாவிய ரீதியில் பல சமூக நலன் சேவைகளை நடாத்தி வருகின்றது. இந்தியா, கலிபோர்னியா போன்ற இடங்களில் தலைமைக் காரியாலயங்கள் உண்டு. சுவாமி முத்துக்கிருஷ்ணா தமிழ் நாட்டில் திருநெல்வேலி வள்ளியூரில் வாழ்ந்தவர். மருந்து மூலிகைகளைக் கொண்டு குணப்படுத்த முடியாத நோய்களையும் குணப்படுத்தி வெற்றி கண்டார். இந்த மிஷனுக்கு வரும் பக்தர்கள் ஏதோ ஒரு வழியில் தங்கள் நோய்களையும் கவலைகளையும்வெற்றிகண்டவர்களாகவே அமைகின்றனர்.

முத்துக்கிருஷ்ண மிஷன் கொழும்பு நகரிலும் சிவராத்திரி, நவராத்திரி விழா போன்றவைகளை நடாத்தியதுடன் 24மணி நேரமும் சமூகத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. ஏழைகளையும், வயதானவர்களையும் பராமரித்து சகல உதவிகளையும் நல்கி வருகின்றது. ஒவ்வொரு அமாவாசை தோறும் தங்கள் தொண்டர்கள் கைபட சமைத்த உணவை அவர்கள் மூலம் ஏழைகளுக்கு பரிமாறி வருவது இதன் கைங்கரியங்களில் ஒன்று. இதற்கு வேலையாட்களோ வேறுஉதவிகளோ இவர்கள் பெற்றுக்கொள்வதில்லை. அமாவாசைக்குப் பயன்படுத்தும் அரிசி முத்துக்கிருஷ்ணா தொண்டர்கள் ஒருநாள் சமையலுக்குபயன் படுத்தும் அரிசியில் இருந்து ஒரு பிடி அரிசி வீதம் சேகரித்து அதைக் கொண்டு பெற்ற முழு அரிசியில் அமாவாசை உணவளிப்பு வெற்றிகரமாக ஏழைகளுக்கு வழங்கப்படுகின்றது, என தற்போது யாகத்தின் நடத்துனராக உள்ள திரு. எஸ். மனோசரன் குறிப்பிட்டார். கொழும்பு மாநகரில் முத்துக்கிருஷ்ண மிஷன் நடாத்தும் பணிக் குழுவில் திரு. சண்முகநாயகம் சட்டத்தரணி டாக்டர் ஸ்ரீதரன், திரு. அட்சயன், திரு. ஜெயகுமார் சட்டத்தரணி போன்றவர்கள்

அங்கம் வகிப்பது சிறப்பான மேம்பாட்டுக்கு வழிவகுப்பதாகும்.

சமயப்பணிகளையும், சமூகப்பணிகளையும் ஒருங்கிணைக்கும் நோக்குடன் நடாத்தப்படும் இவ் யாகத்திற்கு பல எதிர்ப்புக்கள் கிடைத்தபோதிலும் மனம் சலியாது தம் கருமமே கண்ணாக நின்று கருமமாற்றி வரும் முத்துக்கிருஷ்ண மிஷனின் பணி தொடரவும் நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலைக்கவும் வேண்டி இலங்கை மக்கள் பூரண ஆதரவு நல்குவதோடு இந்துக்களாகிய நாம் யாக இடம் சென்று அதில் எங்கள் பங்களிப்பையும் செய்தால் இந்து சமய வளர்ச்சிக்கு நாம் ஆற்றும் தொண்டாக அதைக் கருத முடியும்.

— தில்லை.

# இந்துத் தத்துவத்தின் ஒன்பது மணிகள்

நமது மதம் என்ன சொல்கிறது என்று தெளிவின்றி இருப்போர்க்காக மிக இலகுவான சில சிந்தனைகள்:—

1. சர்வ வல்லமை மிக்க சர்வ வியாபியான, முற்றும் உணர்ந்த ஒரு இறைவன் இருக்கிறான்.

2. ஒவ்வொரு உயிரும் இறைவனை நோக்கிய பயணத்தை மேற்கொள்கிறது. அங்ஙனம் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் நிலையை மோட்சம் என்கிறோம்.

3. உயிர்களின் கர்ம வினைகளுக்கேற்ப அவை மீண்டும் மீண்டும் பிறந்தே ஆகவேண்டும்.

4. கர்மவினைகள் நல்லவையோ தீயவையோ அவை எமது சிந்தனை, சொல், செயல் என்பவற்றால் ஒவ்வொரு கணமும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.

5. கர்மவினைகளை முற்றாகத் தொலைக்கும்வரை மறு பிறவிகள் தொடர்ந்து கொண்டிருக்கும் என இந்து மதம் தெட்டத் தெளிவாக வலியுறுத்துகின்றது.

6. எமது சிந்தனை, சொல், செயல் எவ்வற்றை புனிதப்படுத்திக் கொள்வதற்காகவே கோயிற் பூஜை, யாகம், தியானம், யோகம் போன்ற பல்வேறு முறைகளை நாம் மேற்கொள்கின்றோம்.

7. மனக் கட்டுப்பாடு, ஒழுக்கமுள்ள நடத்தை போன்றவற்றோடு ஒரு சற்குருவின் வழிகாட்டலிலே எமது எண்ணங்களை நாம் தூய்மை செய்து, கர்மபலன்களை குறைத்துக் கொள்ளலாம்.

8. அனைத்தும் இறைவனின் படைப்புக்களே. எனவே, பேதம் பாராட்டாது, மனிதர்கள் மீதும் ஏனைய படைப்புக்கள் மீதும் அன்பு செய்யும்போது, நாம் இறைவனுக்குகந்தவர் ஆகிறோம்.

9. ஒரே உண்மையை பல மதங்களும் பலவாறு உரைக்கின்றன. கருணை உணர்வுடன் பிறருக்கு, நினைப்பாலோ, செயலாலோ தீங்கு செய்யாத எவரும் இறைவனின் அருட்குழந்தைகள். இறைவன் சந்நிதியில் பேதங்கள் எதுவுமே இல்லை.









**மேலே :** **7.9.90**ம் திகதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன கேட்போர்கூடத்தில் இந்துக்குருமாருக்கான அடையாள அட்டை வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதி மாண்புமிகு எம். எஸ். செல்லச்சாமி அவர்கள் ஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்களுக்கு அடையாள அட்டை வழங்குவதையும் இந்துக்குருமாரின் ஒரு பகுதியினரையும் காண்க. **கீழே :** **26.9.90** திகதி அதே கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் மதுரை ஆர். முரளீதரன், ஆர். மணிமேகலையின் பரதநாட்டிய அபிநயத்தை பிரதம அதிதியான இந்தியத்தூதுவர் திரு. என். என். ஜா, திருமதி ஜா, திரு. பிட்மன் வீரக்கோன், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், திருமதி தேவராஜ், அமைச்சின் செயலாளர் கே. வி. லோகேஸ்வரன், திருமதி லோகேஸ்வரன் ஆகியோர் இரசிப்பதை படத்தில் காணலாம்.

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள
# விற்பனைக் கருமபீடம்

## விற்பனைக்குள்ள நூற்பட்டியலும், விலை விபரமும்

| | | |
|---|---|---|
| 1. | மூவர் தேவாரம் | 650.00 |
| 2. | இந்து கலைக்களஞ்சியம் | 250.00 |
| 3 | அமுதகலசம் | 250.00 |
| 4. | ESSENTIALS OF HINDUISM | 150.00 |
| 5 | இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் | 125.00 |
| 6. | அகில உலக இந்து மாநாட்டு மலர் | 125.00 |
| 7. | மட்டக்களப்பு மாவட்ட திருத்தலங்கள் | 25.00 |
| 8 | திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள் | 25 00 |
| 9. | BHAGAVAD GITA | 100.00 |
| 10. | முருகவேளின் பன்னிரு திருமுறைகள் | 100.00 |
| 11 | மதங்கசூளாமணி | 100.00 |
| 12. | STUDIES AND TRANSLATION | 100.00 |
| 13. | ஆரையம்பத் ஸ்ரீ பரமநயினார் சுவாமி | 50.00 |
| 14. | உடப்பு ஸ்ரீ அப்பாள் வரலாற்று நூல் | 20 00 |
| 15. | திருக்கதிர்காம பிள்ளைத்தமிழ் | 25.00 |
| 16. | மண்டூர் பிள்ளைத்தமிழ் | 25.00 |
| 17. | YOGASWAMY | 20.00 |
| 18. | SATGURU YOGASWAMY | 20.00 |
| 19. | பரமஹம்சர் கூறிய பக்திக்கதைகள் | 15 00 |
| 20. | ஔவையார் அறிவுச் செல்வங்கள் | 10.00 |
| 21. | இராமாயணக் குட்டிக்கதைகள் | 10.00 |
| 22. | ஆரையூர்க்கோவை | 20.00 |
| 23. | கோபுரம் | 07.00 |
| 24. | ஆலயமணி | 07.00 |
| 25. | பக்திப் பாடல்களின் ஒலிப்பதிவு நாடாக்கள் | 75.00 |

இந் நூல்களை திணைக்களக் கருமபீடத்தில் காரியாலய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு - 12.